# SY-520

Reg. No. : ....................................

Name : ..........................................

**SECOND YEAR HIGHER SECONDARY EXAMINATION, MARCH 2024**

Part – III

Time : 2½ Hours

**TAMIL (Optional)**

Cool-off time : 15 Minutes

Maximum : 80 Scores

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

**1 முதல் 10 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் எட்டனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண்கள் ஒன்று வீதம்**

**(8 × 1 = 8 மதிப்பெண்கள்)**

1. பள்ளு இலக்கியங்களில் சிறப்பாகப் போற்றப்படுவது ?

   (அ) தஞ்சைப் பள்ளு  (ஆ) திருமலைப் பள்ளு

   (இ) திருவாரூர்ப் பள்ளு  (ஈ) முக்கூடற் பள்ளு

2. 'ஆகாயத்திற்கு அடுத்த வீடு' என்ற நூலிற்கான சாகித்ய அகாதெமி விருது பெற்றவர் ?

   (அ) மு. வரதராசன்  (ஆ) வைரமுத்து

   (இ) மு. மேத்தா  (ஈ) சிற்பி

3. வீரமாமுனிவர் எழுதிய சிறுகதை நூல் ?

   (அ) சதுரகராதி  (ஆ) பரமார்த்த குரு கதை

   (இ) தொன்னூல் விளக்கம்  (ஈ) திருக்காவலூர் கலம்பகம்

4. ‘பாரதியுகம்’ என்றழைக்கப்பட்ட காலகட்டம்?

(அ) 20-ஆம் நூற்றாண்டு (ஆ) 19-ஆம் நூற்றாண்டு

(இ) 17-ஆம் நூற்றாண்டு (ஈ) 18-ஆம் நூற்றாண்டு

5. ‘இடம் பெயர்ந்து செல்லுதல்’ என்ற பொருள் உணர்த்தும் சொல்?

(அ) வலசை (ஆ) வள்ளம்

(இ) வளை (ஈ) கிள்ளை

6. கந்நபுராணத்தில் பேசப்படும் தமிழ்க் கடவுள்?

(அ) விநாயகர் (ஆ) முருகன்

(இ) சிவன் (ஈ) பார்வதி

7. சிற்றிலக்கியங்கள் எத்தனை வகைகளாகப் பரிக்கப்பட்டுள்ளது?

(அ) 97 (ஆ) 98

(இ) 96 (ஈ) 99

8. ‘ரெடிமேட்’ என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம்?

(அ) ஆயாசம் (ஆ) கலம்

(இ) கானம் (ஈ) ஆயத்தம்

9. ‘அரி’ என்ற மலையாளச் சொல் தமிழில் எவ்வாறு வழங்கப்படுகிறது.

(அ) அரிசி (ஆ) ரைஸ்

(இ) சோறு (ஈ) சாப்பாடு

10. “தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்தியம் இவையுண்டு, தானுண்டு”
என்று மொழிந்தவர்?

(அ) மகாகவி (ஆ) பாவேந்தர்

(இ) கவிமணி (ஈ) கவியரசு

**11 முதல் 18 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 2 வீதம். (6 × 2 = 12 மதிப்பெண்கள்)**

11. மெய்ஞானத்தில் வல்லவர்களாக விளங்கிய இரு சித்தர்களின் பெயர்களை எடுத்தெழுதுங்கள்.

    (திருமூலர், பாவேந்தர், திருநாவுக்கரசர், பட்டினத்தார்)

12. 'தொல்காப்பியம்' – சிறு குறிப்பு எழுதுங்கள்.

13. தமிழ்மொழி வளர்ச்சி அடையப் பாரதிதாசன் குறிப்பிடும் கருத்துகளில் இரண்டினை எழுதுங்கள்.

14. 'தாத்தா தொலைந்துபோனார்' என்ற சிறுகதையில் இடம்பெற்றுள்ள இரு கதாப் பாத்திரங்களின் பெயர்களை எழுதுங்கள்

15. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் உள்ள ஆங்கிலச் சொற்களை எடுத்தெழுதுங்கள்.

    "பெரியவங்களே ... நம்ம ... அய்யா லேடீஸ், காலேஜ் திறக்கப் போறாங்க. நம்ம ஜில்லாவில் பல பேரு கேட்டுக் கிடைக்கல"

16. செய்தி சேகரிப்பில் அவசியமான 'பேட்டி' குறித்து சிறு விளக்கம் எழுதுங்கள்.

17. கடலில் நீரோட்டம் உருவாவதற்குரிய காரணங்களுள் இரண்டினை எழுதுங்கள்.

18. ஐம்பெருங்காப்பியங்களுள் இரட்டைக் காப்பியங்களாகக் கருதப்படும் நூற்களின் பெயர்களை எழுதுங்கள்.

**19 முதல் 24 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு அரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் நான்கு வீதம்.**

**(5 × 4 = 20 மதிப்பெண்கள்)**

19. *சரியானவற்றைப் பொருத்தி எழுதுங்கள்.*

*(அ) புதுக்கவிதை இயக்கத்தின் முன்னோடி – ராபர்ட் டி நொபிலி*

*(ஆ) திராவிட மொழிகளை ஒப்பாய்வு செய்தவர் – புதுமைப்பித்தன்*

*(இ) தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு முன்னோடி – ந. பிச்சமூர்த்தி*

*(ஈ) தமிழ்ச் சிறுகதை உலகின் சக்கரவர்த்தி – டாக்டர் கால்டுவெல்*

20. *உங்கள் வகுப்பில் நடைபெறவிருக்கும் கருத்தரங்க விவாதத்தில் பங்கேற்க, 'அதிக மொழிகள் கற்பது! அதிக நன்மையே!' என்ற தலைப்பில் குறிப்பு எழுதுங்கள்.*

21. *கீழே தரப்பட்டுள்ள பத்தியைத் தமிழ்ப்படுத்தி எழுதுங்கள்.*

*" ரெண்டு கொழு கலப்பகட்டி நாலு சாலு*
*அடிச்சா சோத்த அள்ளிச் சாப்புடலாம்.*
*அப்படியாப்பட்ட மண்ணு.. அந்த வாசனை*
*அதுவும் உரம் போடுறதுக்கு மோப்பம்*
*புடிச்சா கிறங்கித்தான் போகணும்."*

22. *'சமூக ஊடக, அதீதப் பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள்' என்ற தலைப்பில் வானொலி உரை தயார் செய்யுங்கள்.*

23. *பின்வரும் நிகழ்ச்சிநிரலின் அடிப்படையில் பத்திரிகைக்கான விளம்பரம் தயார் செய்யுங்கள்.*

*பாரம்பரியத் தொழில் பாதுகாப்புக் கருத்தரங்கம்*

| | | |
|---|---|---|
| *நாள்* | : | *07-03-2024* |
| *இடம்* | : | *பள்ளிக் கருத்தரங்க அறை* |
| *கடவுள் வாழ்த்து* | : | *பள்ளி மாணவர்கள்* |
| *வரவேற்புரை* | : | *பெற்றோர்-ஆசிரியர் கழகத் தலைவர்* |
| *தொடங்கிவைப்பவர்* | : | *தொழில்துறை அமைச்சர்* |
| *தலைமை தாங்குபவர்* | : | *பள்ளி முதல்வர்* |
| *கட்டுரை வாசிப்பவர்* | : | *மாணவர்கள்* |
| *நன்றியுரை* | : | *மாணவர் தலைவர்* |

24. *'தமிழ் வளர்ச்சியில் வலைப்பூக்கள்' என்ற கட்டுரை மூலம் இணையத்தமிழ் குறித்த விழிப்புணர்வை மாணவர்களிடம் ஏற்படுத்திய திரு. முனைவர் துரை மணிகண்டன் அவர்களை வாழ்த்தும் விதமாகப் பாராட்டுக் கடிதம் தயார் செய்யுங்கள்.*

***25 முதல் 29 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் நான்கனுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் ஆறு வீதம்***

**(4 × 6 = 24 மதிப்பெண்கள்)**

25. *பள்ளி மலரில் இடம் பெறச் செய்வதற்காக, 'உழைப்பே உயர்வு' என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுங்கள்.*

26. *கீழே தரப்பட்டுள்ள பாடலை நயம் பாராட்டி எழுதுங்கள்.*

*"எல்லோரு மோர்குலம் எல்லாரு மோரினம்*

*எல்லாரு மிந்திய மக்கள்*

*எல்லாரு மோர்நிறை எல்லாரு மோர்விலை*

*எல்லாரு இந்நாட்டு மன்னர் – நாம்*

*எல்லாரும் இந்நாட்டு மன்னர் – ஆம்*

*எல்லாரும் இந்நாட்டு மன்னர் – வாழ்க!"*

*- (சுப்பிரமணிய பாரதியார்)*

*(சொல்நயம், பொருள் நயம், எதுகை, மோனை)*

27. *'தாய்மொழி வழிக்கற்றலும் பயன்களும்' என்ற தலைப்பில் தொலைக்காட்சி உரை தயார் செய்யுங்கள்.*

28. ஈமக்கலயம் கவிதை மூலம் பரம்பரைத் தொழில் மற்றும் தொழிலாளர் நிலை குறித்த உணர்வுகளை வெளிப்படுத்திய கவிஞர் திரு. அருண்பாரதி அவர்கள் உங்கள் பள்ளிக் கலை விழாவினைத் தொடங்கி வைக்க வருகை தரவுள்ளார். அவரிடம் நேர்முகம் காண ஐந்து வினாக்கள் கொண்ட வினாநிரல் தயார் செய்யுங்கள்.

29. செய்தியின் சாளரமாகத் திகழ்வது தலைப்பு.
கீழே தரப்பட்டுள்ள தலைப்பின் இரு வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்கி எழுதுங்கள்.
(அ) ஆறுமுகத் தலைப்பு
(ஆ) கூம்புத் தலைப்பு

**30 முதல் 32 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு இருபக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் எட்டு வீதம்.**

**(2 × 8 = 16 மதிப்பெண்கள்)**

30. 'விழிப்பு' என்ற சிறுகதையைத் திறனாய்வு செய்து கட்டுரையாக எழுதுங்கள்.

- கதைக் கரு
- கதாப் பாத்திரங்கள்
- கதைப் பின்னணி
- மொழிநடை

31. உலகத் தாய்மொழி நாளை முன்னிட்டு தமிழ்ச்சங்கத்தில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் பங்கேற்றுப் பேசுவதற்காக, 'மொழியும் சமூகமும்' என்ற தலைப்பில் கட்டுரை தயார் செய்யுங்கள்.

- மொழி-சமூகம் தொடர்பு
- மொழிப் பற்று
- மொழி இழப்பும் மீட்டலும்
- மொழி வளர்ச்சி

32. “மனித ருணவை மனிதர் பறிக்கும்

வழக்க மினியுண்டோ?

மனிதர் நோக மனிதர் பார்க்கும்

வாழ்க்கை யினியுண்டோ?”

(சுப்பிரமணிய பாரதியார்)

“மனிதனை மனிதன் ஏய்க்கிறாண்டா

– தம்பிப்பயலே – அது

மாறுவதெப்போ தேறுவதெப்போ நம்ம கவலை”

(பட்டுக்கோட்டையார்)

மேலே தரப்பட்டுள்ள கவிதைகளில் இடம் பெறும் மனிதநேயக் கருத்துகளை ஒப்பிட்டு ஒப்பீட்டுக்கட்டுரை தயார் செய்யுங்கள்.

- சுப்பிரமணிய பாரதியார் – கருத்துகள்
- பட்டுக்கோட்டையார் – கருத்துகள்
- சமூக அவல – ஒப்பீடு
- மனிதநேயம் காத்தல்